**நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகள் - 2017**

நகர அபிவிருத்தி அதிகாரசபையினதும் அதன் துணைக் கம்பனிகளதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒருங்கிணைந்த நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான ஒருங்கிணைந்த விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க பேணப்படும் கணக்காய்வு அபிப்பிராயத்தின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீதி அபிப்பிராயமொன்றினை வெளியிடல் எனது பொறுப்பாகும்.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் நிதி நிலைமைக்கூற்று விரிவான வருமானக்கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றைத் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 மறுப்பு அபிப்பிராயம் - தொகுதி**

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் ஆம் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன் அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**மறுப்பு அபிப்பிராயம் - அதிகாரசபை**

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன் அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அதிகாரசபையின் துணைக் கம்பனிகளான நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் கம்பனி, வோடர்ஸ் ஏஜ் லிமிடெட், லங்கா ரெஸ்ட் ஹவுஸ் (தனியார்) கம்பனி ஆகியவை 2017 ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக கொண்டிருந்ததுடன், பெஹெலியகொட வெயார் ஹவுஸ் தொகுதிக் கம்பனியினால் 2014 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. இந்த 04 கம்பனியினதும் முழுப் பங்குரிமையும் அதிகாரசபைக்குச் சொந்தமாக இருந்தது. 2017 யூலை மாதம் பெஹெலியகொட வெயார் ஹவுஸ் தொகுதிக் கம்பனியின் முதலீட்டுப் பெறுமதி ரூபா 500 மில்லியனாக இருந்ததுடன், அந்த முதலீட்டுப் பெறுமதி அந்த அளவினால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன், 2017 ஆகஸ்ட் மாதம் முதல் கம்பனி அதிகாரசபையினால் சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும் தேவையான சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரிமை கையளிக்கப்பட்ட ரூபா 642.5 மில்லியன் பெறுமதியான காணி மற்றும் கட்டிடம், அதன் பழுதுபார்த்ததல் ஆகியவற்றுக்காக வழங்கப்பட்ட ரூபா 200 மில்லியன் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு பங்குகளை வெளியிடுவதற்காக துணைக் கம்பனியான வோட்டர்ஸ் எஜ் கம்பனியிடம் கோரிக்கை விடுத்திருந்தது. எனினும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும், பங்குகள் வெளியிடப்பட்டிராததுடன், ரூபா 842.5 மில்லியன் பெறுமதிக்கு வெளியிடும் இணக்கப்பாடொன்று (Pending Allotment of Shares) காணப்படுவதாக வோட்டர்ஸ் எஜ் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 436 மில்லியனாக இருந்தது. முன்னை ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த முதலீட்டு பெறுமதி ரூபா 406.5 மில்லியனால் குறைவடைந்திருந்ததுடன், அதற்கான காரணங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிராததுடன் பங்குகளை வெளியிடுவதற்கான முறையான உடன்படிக்கையொன்று மேற்படி கம்பனி மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) நகர முதலீட்டு அபிவிருத்தி கம்பனியின் பிரதான வருமான மூலமான வாடகை வருமானத்தின் பெறுவனவு தொகுதியின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் நேரடியாக சீராக்கம் செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் எவ்வித சீராக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லைஇ

**2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை – அதிகாரசபை**

**2.3.1 இலங்கைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் இணங்காமைகள் எண்ணிக்கப்பட்டன.

**(அ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 07**

நகர அபிவிருத்தி சார்ந்த நிகழ்ச்சித்திட்டத்தை (UDSP) அமுல்படுத்துவதற்காக ரூபா 22.25 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருருந்த போதிலும், அது தொடர்பாக போதியளவான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 10**

---

அதிகாரசபையினால் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது 3 தனியார் கம்பனிகள் தாய்க் கம்பனியுடன் இணைக்கப்பட்டிருந்ததுடன், இந்த ஒருங்கிணைப்புகளுக்குரிய ரூபா 2.5 மில்லியன் தேறிய சொத்துக்களை ஒருங்கிணைத்தல் தொடர்பிலான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிராததுடன், உரிய பட்டோலைகளும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 17**

---

நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்ட ரூபா 36,551 மில்லியன் தொகையான பிற்போட்ட குத்தகை வாடகை (Differred Lease Rent) தொடர்பாக போதியளவான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 24**

---

மீளாய்வாண்டு காலப்பகுதிக்காக கணக்காய்வு செய்யப்பட்ட வோட்டர்ஸ் ஏஜ் துணைக்கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து ரூபா 4,135,486 தொகை கிடைக்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் இதனுடன் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்படவில்லை. அத்துடன், அதிகாரசபையின் நிதக்கூற்றுக்களில் மேற்படி மீதி செலுத்த வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**(உ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 28**

---

மூன்று துணைக் கம்பனிகளின் முதலீடாக ரூபா 45.8 மில்லியன் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த முதலீடுகளுக்குரிய நலன்களை இனங்காண முடியாமைக்கும்/ வருமானத்தை அட்டுறு செய்யாமைக்கும் போதியளவான காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 40**

---

(i) நியமத்தின் பிரகாரம் ரூபா 91,000 மில்லியனான முதலீட்டு சொத்துக்கள் தனியாக முதலீட்டு சொத்தாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த சொத்துக்கள் நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அதிகாரசபையின் நிர்வாக பணிகள் நடாத்திச் செல்லப்படும் செத்சிரிபாய கட்டிடத்தின் 6 மற்றும் 7 ஆம் தளங்களின் பெறுமதி மற்றும் அதிகாரசபையின் நிர்வான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் ஏனைய கட்டிடங்களின் பெறுமதி ரூபா 62.5 மில்லியன் தொகையானது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிப்பதற்கு பதிலாக முதலீட்டு சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிர்மாண பணிகள் மேற்கொள்ளப்படும் நிர்மாணங்களின் பெறுமதியான ரூபா 161.4 மில்லியன் தொகையானது குறை வேலைகளின் கீழ் காண்பிப்பதற்கு பதிலாக முதலீட்டு சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. ரூபா 12,173 மில்லியன் பெறுமதியான காணிகள், ஆதனங்கள் மற்றும் நகர அபிவிருத்திக்கு செலவிடப்பட்டிருந்த ரூபா 11,420 மில்லியன் முதலீட்டு சொத்துக்களை இனங்காணும் அளவீடுகளுக்கு முரணாக ஆதனங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 1950 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய காணிகளை சுவீகரிக்கும் அதிகாரச்சட்டத்தின 44 ஆம் பிரிவின் பிரகாரம் நகர அபிவிருத்தி பணிகளுக்காக சுவீகரிக்கப்பட்டிருந்த தலவத்துகொட விக்கிரமசிங்ஹபுர 54 பேர்ச் அளவான காணியானது ரூபா 600 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அதன் ஆதனங்களின் பெறுமதி ரூபா 616,000 பெறுமதிக்கு சில குடியிருப்பாளர்களுக்கு விற்பனை செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், காணியை மீள் மதிப்பீடு செய்யும் போது தவறுதலாக மிகை மதிப்பீடாக குறிப்பிட்டு 2016 ஆம் ஆண்டின் போது நிதி நிலமைக் கூற்றினை மீளமைக்கும் போது (Restate) ரூபா 555,416,400 தொகையான முதலீட்டு சொத்துக்கள் கணக்கு செலவு வைக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்ட இலாபக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.3.2 கணக்கீட்டுக் கொள்கை

அதிகாரசபையினால் கையேற்கப்பட்ட காணிகளுக்குரிய இழப்பீடு செலுத்துதல் மற்றும் காணிகளை அகற்றும் போது வருமானத்தை இனங்காணும் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக அதிகாரசபைக்கு சொந்தமான வீட்டு இருப்புகளின் பெறுமதி ரூபா 15,277 மில்லியனாக இருந்ததுடன், அந்த பெறுமதிக்கு அதிகாரசபையினால் 2017 ஆம் ஆண்டின் போது வீட்டு உரிமையாளர்களுக்கு கையளிக்கப்பட்ட வீட்டு அலகுகளின் பெறுமதி ரூபா 4,206 மில்லியன் தொகை சரியாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வியாபார இருப்புகளின் பெறுமதி ரூபா 157 மில்லியனால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தற்போது நாட்டினுள் நடைமுறைப்படுத்தப்படாத வரிகளான தேசிய பாதுகாப்பு வரி (NSL) மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகள் வரி (GST) ரூபா 36 மில்லியன் பல வருடங்களாக அறவிடப்பட வேண்டிய அரச கடன் பட்டோராக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சொத்துக்களை அறவிடல் மற்றும் முகாமைத்துவ பிரவினால் பேணிச் செல்லப்படும் கணனி தரவுகளின் அடிப்படையில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வாடகை வருமானக் கடன்பட்டோரின் மீதியானது ரூபா 456,656,981 ஆகும். இவற்றுள் ரூபபா 103,089,890 தொகை (மொத்த வியாபாரக் கடன்பட்டோரின் 22.5 சதவீதம்) வாடகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்ட வாடகையாளர்களின் கடன் மீதிகள் என்பது உறுதி செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே பல மாதங்களாக வாடகை செலுத்துவதை புறக்கணித்திருந்த போதிலும், வாடகை உடன்படிக்கைகளை இரத்துச் செய்யும் வரையிலும் மாதாந்த வாடகை வருமானங்கள் தன்னியக்க முறையில் வாடகை வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்படல் மற்றும் வாடகை கடன்பட்டோர் கணக்குகளுக்கு வரவு வைக்கப்படுதல் மூலம் காசாக கிடைக்கும் வருமானம் கணக்கு வைக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் நிதக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த வாடகை வருமானங்களினுள் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஈ) இடம் பெயர்ந்த 90 குடும்பங்களுக்காக 02 வீடமைப்பு செயற்திட்டங்களில் வழங்கப்பட்ட 90 வீடுகளுக்காக கொழும்பு மாநரை அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 221.3 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மேற்கொள்ளப்பட்ட மாதிரிப் பரிசோதனையின் பிரகாரம் அதிகாரசபையின் வாடகை வருமானம் மற்றும் பாவனை கட்டணம் கணக்குகளில் நிலவிய மறை பெறுமதிகள் முறையே ரூபா 13,865,183 மற்றும் ரூபா 4,907,233 ஆகும். இதன் காரணமாக மேற்படி பெறுமதியினால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த 14 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அதனோடு ஒத்த பட்டோலைகளில் காண்பிக்கப்பட்டிருந்த மீதிகளுக்கிடையே ரூபா 4,425 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 11 அரச நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 3,370 மில்லியன் மீதிகள் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த நிறுவனங்களன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த பெற வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,610 மில்லியன் ஆனமையால் அந்த மீதிகளுக்கடையே ரூபா 240 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இந்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு பல வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கீழே குறிப்பிடப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் அந்த விடயங்களை திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்தவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| | கணக்குகளின் விடயம் | பெறுமதி (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | காணிகள் | 90,883,000 | காணிகள் பதிவேடு |
| (ஆ) | கட்டிடங்கள் | 1,673,241,283 | விரிவான பட்டோலைகள் |
| (இ) | முடிவுறுத்தப்படாத பணிகள் | 28,421,916,742 | பயன்பாட்டு ஆவணங்கள் |
| (ஈ) | நிலையான சொத்துக்கள் பெறுமானத்தேய்வு | 832,983,489 | பெறுமானத் தேய்வுக் கணிப்பீட்டு விபரங்கள் |
| (உ) | காலக்கழிவு செய்யப்பட்ட குத்தகை | 36,550,669,384 | விரிவான குத்தகை பட்டோலைகள் |
| (ஊ) | ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய பணம் | 1,808,062,489 | ஒப்பந்தக் கடன் பட்டோர் பதிவேடு |
| (எ) | ஏனைய வருமானம் | 349,130,232 | விரிவான பட்டோலைகள் |
| (ஏ) | கடன் பட்டோர் மீதிகள் | 171,840,608 | மீதி உறுதிப்படுத்தல்கள் |

## 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையினால் பல்வேறு செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்த தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 4.2 மில்லியன் ஆகும். இதற்கான பகுப்பாய்வொன்று கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர அபிவிருத்தி சார்ந்த செயற்திட்டத்தின் ஒப்பந்ததாரர்களிடமிருந்து (UDSP) அறவிடப்பட வேண்டிய ரூபா 3,485,138 தொகையானது 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாதிருந்ததுடன், அந்த மீதிகளை பகுப்பாய்வு செய்து அவற்றை அறவிடுவதற்கு அல்லது தீர்ப்பனவு செய்வதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) பல்வேறு மூலதன பணிகளுக்காக கொள்வனவாளர்களிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 5,476 மில்லியன் மீதியில் ரூபா 1,035 மில்லியன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோர் இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது பொறுப்பற்ற மீதிகளை வருமானமாக கணக்கு வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட கடன் பட்டோரிடையே 16 கணக்கு மீதிகளுக்குரிய ரூபா 171,840,608 கூட்டுத்தொகையான கடன் பட்டோர் கணக்கு மீதிகள் 2013 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படாது முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(உ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் 99 செயற்திட்டங்களின் கீழ் கடைகள், வீடுகள் மற்றும் அலுவலக இடங்களை வாடகைக்கு வழங்கியமையால் உருவான கடன் பட்டோர் மீதிகள் ரூபா 463,474,814 ஆக இருந்ததுடன்,இந்த கடன் பட்டோர் மீதிக்கு ரூபா 7,579,703 தொகையான மறை கடன் பட்டோர் மீதி ஈடு செய்யப்பட்டிருந்ததுடன், இந்த கடன் மீதிக்காக காலப்பகுப்பாய்வொன்று முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நடைமுறை பொறுப்புகளின் கீழ் ரூபா 7,225,110 ஆன பெறுமதியானது பராமரிப்பு வைப்புக்களாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மீதியில் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாத மீதி ரூபா 7,063,500 ஆகும்.

(எ) 03 முதல் 05 வருடங்கள் வரையான காலப்பகுதிக்குரிய தீரப்பனவு செய்யப்படாத ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய பட்டியல்களின் பெறுமதி ரூபா 30,846,831 ஆக இருந்தது.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம் | |
| (i) 383 ஆம் பிரிவு | கணக்குகளைத் தீர்த்து முடிவிடுதல் தொடர்பான ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்குகளைத் தீர்த்து முடிவிடுதலை ஆரம்பிப்பதற்கு, முன்னைய இரண்டு வருடங்களில் கலைக்கப்பட்ட கம்பனியின் அல்லது தொடர்புடைய கம்பனியின் பணிப்பாளராக இருக்கும் ஒருவர் கலைப்பாளராக நியமிக்க முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தும் துணைக் கம்பனியின் பணிப்பாளரொருவர் கலைக்கப்படுகின்ற கம்பனியான பேலியாகொட வெயார் ஹவுஸ் தொகுதிக் கம்பனியின் கலைப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். |
| (ii) 330 ஆம் பிரிவு | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்காக கணக்குகளைத் தீர்த்து முடிவிடுதல் இடம் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் கணக்குகளைத் தீர்த்து முடிவிடுதலை ஆரம்பிக்கும் திகதி முதல் முதலாவது ஆண்டின் இறுதியின் போதும் மற்றும் அடுத்த ஒவ்வொரு ஆண்டின் இறுதியின் போதும் அல்லது வருட இறுதியிலிருந்து 03 மாதம் அல்லது பதிவாளரினால் அனுமதி வழங்கப்படக்கூடிய கால எல்லையில் அல்லது முன்னைய இலகுவான தினத்தில் கலைப்பாளரினால் கம்பனியின் பொதுச் சபைக் கூட்டம் கூட்டப்பட வேண்டிய போதிலும் மேற்கூறப்பட்ட நிறுவனத்தில் அந்த வகையில் நடாத்தப்பட வேண்டிய பொதுச் சபைக் கூட்டம் நடாத்தப்படவில்லை. |
| (ஆ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாக நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் 1980 இன் 45 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டம் | ஊழியர் சேமலாக நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றைக் கணிப்பீடு செய்யும் போது வாழ்க்கைச் செலவுப் படி கவனத்திற் கொள்ளப்படாமையின் காரணமாக 2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான பங்களிப்புப் பணம் மற்றும் மிகைக் |

| | | |
|---|---|---|
| | | கட்டணமாகச் செலுத்த வேண்டிய நிலுவைப் பணம் ரூபா 31,432,701 ஆகும். |
| (இ) | 2003 இன் 39 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) பொது வசதிகள் அதிகாரச் சட்டம் | வீடமைப்பு செயற்திட்டங்களில் வீட்டுத் தொகுதிக்காக கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையில் சான்றிதழ் பெறப்பட வேண்டிய போதிலும் நகர புனர்வாழ்வு செயற்திட்டத்தின் மூலம் முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட அனேக வீட்டுத்தொகுதிகளுக்காக இந்தச் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை. |
| **(ஈ)** | **அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை** | |
| | (i) 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் சிபாரிசு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியாலாளர்கள், பூகோள விஞ்ஞானிகள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், நகர வடிவமைப்பாளர்கள் மற்றும் அளவிடை ஆய்வாளர்கள் போன்ற தொழில்களுக்காக ரூபா 15,000 மாதாந்த தொழில்தகைமைப் படியொன்று 2014 யூலை 01 ஆந் திகதி முதல் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 219 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 30,183,000 தொகையும் முன்னைய ஆண்டிற்காக ரூபா 27,930,000 தொகையும் அதற்காகச் செலவிடப்பட்டிருந்தது. |
| | (ii) 2016 மார்ச் 09 ஆந் திகதிய 05/206 ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ள ஊழியர் அட்டவணையில் இல்லாத பணிப்பாளர் மற்றும் பிரதி பணிப்பாளர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது அவ்வாறான 8 பதவிகளில் 8 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு இரண்டு சம்கள ஏற்றங்கள் வழங்கப்பட்டு அவர்களுக்கு போக்குவரத்து படிகளாக ரூபா 3,400,000 தொகை மற்றும் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் மாதமொன்றிற்கு 120 லீட்டர்களுக்கு சமனான எரிபொருள் படி தொடர்ச்சியாக செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே, அந்த |

| | | |
|---|---|---|
| | | உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்கும் போது உரிய பதவியுயர்வு நடைமுறைக்கு புறம்பாக பதவியுயர்வாக பதவி கையளிக்கப்பட்டிருந்தது. |
| (iii) | 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | தனியார் வாகனமொன்றை தனது உத்தியோகபூர்வ பாவனைக்காக பயன்படுத்தி படிகளைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரசபையின் 23 உத்தியோகத்தர்களுக்கு சாரதிகள் வழங்கப்பட்டு அந்த சாரதிகளின் சம்பளம் மற்றும் மேலதிக நேரடிப்படியாக ரூபா 30,186,085 தொகை மீளாய்வாண்டில் அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்தது. அத்துடன், மீளாய்வாண்டினுள்ளும் 36 உத்தியோகத்தர்களுக்கு இவ்வாறு சாரதிகள் இணைப்பு செய்யப்பட்டிருந்ததுடன், இவ்வாறான உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள் தொடர்பிலான விபரங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | அதிகாரசபைக்கான செயலாற்றலை அடிப்படையாகக் கொண்டு பதவியுயர்வு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் பதவியின் புதிய சம்பளக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்னர் அதனை அமுல்படுத்துவதற்கு தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் முழுமையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. எனினும் உத்தேச பதவியணிக் கூட்டிணை பயன்படுத்தி முன்னைய அங்கீகாரத்தின் கீழ் அதிகாரசபையால் உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த சுற்றறிக்கையின் பிரகாரம், பதவிகளுக்குரிய பதவியுயர்வுகளை வழங்கும் போது புள்ளி வழங்கும் திட்டம் தொடர்பாக உத்தியோகத்தருக்கு அறிவிக்க வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்ததும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(உ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை

---

| | | |
|---|---|---|
| (i) | 2001 சனவரி 26 ஆந் திகதிய PF/PE 12 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபனம் மற்றும் சபைகளில் கணக்குகள் மற்றும் வங்கி நடவடிக்கைகள் அரச வங்கிகளிலிருந்து மாத்திரம் மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை மீறும் வகையில் தேசிய அபிவிருத்தி வங்கியான தனியார் வங்கியில் கணக்குகள் திறக்கப்பட்டு வீடுகளை விற்பனை செய்வதற்காக தவணை அடிப்படையில் கிடைக்கும் பணத்தை வைப்புச் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (ii) | 2016 சனவரி 08 ஆந் திகதிய 2016/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | • அவசர சேவைகளை நிறைவேற்றுவதற்காக வெளிவாரி தரப்பினரிடம் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியுமானதுடன், அதன் போது நிறுவனத்தினுள் பொருத்தமான நபரொருவர் இல்லையென் தனிப்பட்ட ரீதியில் திருப்தி கொண்டவிடத்து வரிசை அமைச்சின் செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் இரண்டு மாதங்களுக்காக மாத்திரம் வெளிவாரி நபர் ஒருவரின் சேவையினை பெற்றுக்கொள்ள முடியுமான போதிலும், அந்த சுற்றறிக்கைக்கு முரணாக செயற்பட்டு 12 மதியுரையாளர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 13,013,500 படியான மதியுரையாளர்களை இணைப்பு செய்யத நாள் தொடக்கம் ரூபா 23,631,491 தொகை செலுத்தப்பட்டிருந்தது.<br><br>• வெளிவாரி நபர் ஒருவருக்கு சேவையை பெற்றுக்கொள்ள முன்னர் சேவை வழங்கும் நிறுவனத்தினால் மதியுரையாளரால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிப்பொறுப்பு (Terms of Reference) தெளிவாக இனங்காணப்பட்டு சேவையினை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் மதியுரையாளர்களின் சேவையினை பெற்றுக்கொள்ளும் போது ஒவ்வொரு மதியுரையாளரிடமிருந்தும் |

| | | |
|---|---|---|
| | | பெற்றுக்கொள்ளப்படும் சேவை தொடர்பில் இனங்காணாது ஒப்பந்த அடிப்படையில் மதியுரையாளர்கள் நியமிக்கப்பட்டு அந்த மதியுரையாளர்களின் ஒப்பந்தக்காலம் தொடர்ச்சியாக நீடிப்பு செய்யப்பட்டிருந்தது. |
| | | ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவுகள் 60 நாட்களை விஞ்சாத குறுங்கால் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அவசர சேவைகளுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், செலுத்தக்கூடிய ஆகக்கூடிய தொகை ரூபா 60,000 ஆன போதிலும், அதிகாரசபையினால் மேற்படி சுற்றறிக்கையில் ஏற்பாடுகளை மீறும் வகையில் 08 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வு காலப்பகுதியினுள் கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளம் மற்றும் படிகள் தொடர்பில் முழுமையான விபரங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே அந்த உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்பட்ட சேவை தொடர்பில் அறிக்கையிட்ட வேலை அறிக்கைகளும் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | • 4.2.6 ஆம் பந்தி | அதிகாரசபையின் காலாண்டு ரீதியான செயலாற்றல் அறிக்கை காலாண்டு முடிவடைந்து 30 நாட்களுக்குள் பொது முயற்சிகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| | • 8.2.3 ஆம் பிரிவு | துணைக்கம்பனியாக அதிகாரசபையால் 2014 நவம்பர் 21 ஆந் திகதி தாபிக்கப்பட்ட Urban – Investment & Real State தனியார் கம்பனி, Urban – Investment & Hotel Development கம்பனி, Orchard Urban Housing Development கம்பனி, Waters Edge Hotel Develeopment கம்பனி என்பவற்றைத் தாபிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | • 9.2(ஈ) பிரிவு | அதிகாரசபையின் பதவியணியின் ஒட்டு மொத்தத்திற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| | • 9.14 ஆம் பிரிவு | அதிகாரசபையினால் மனிதவள முகாமைத்துவம் தொடர்பான செயல் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு அற்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் அவ்வாறில்லையாயின் மனிதவள முகாமைத்துவத்திற்காக தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 2004 சனவரி 03 ஆந் திகதிய 01/2003 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அதிகாரசபையால் வயது 60 வருடங்களை விஞ்சிய ஓய்வுபெற்ற 08 உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு நடவடிக்கைகளுக்காக பொதுத் திறைசேரியின் இணக்கப்பாடின்றி சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மாதாந்தம் ரூபா 42,852 முதல் ரூபா 100,000 இற்கிடையிலான பல்வேறு வீச்சின் கீழ் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக வாகனங்கள், எரிபொருள் வசதிகள், சாரதிகள் போன்றன வழங்கப்பட்டிருந்தன. |
| (ஏ) | 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 597/8 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் V ஆவது பட்டோலையின் 7 ஆம் பந்தி | அதிகாரசபையினால் சில வருடங்களுக்கு முன்னர் 1868 அனுமதியற்ற நிர்மாணங்கள் மற்றும் அனுமதியற்ற மாற்றங்கள் செய்தல் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனுமதியற்ற நிர்மாணங்களை சட்டரீதியாக்க முடியுமாயின், மேவுகை அங்கீகாரத்திற்கான கட்டணத்தையும், பயன்பாட்டை மாற்றுவதற்கான கட்டணத்தையும் அதிகாரசபையினால் அறவிட்டு அந்த நிர்மாணங்களை சட்டரீதியாக்குவதற்கோ அல்லது அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 2001 யூலை 10 ஆந் திகதிய 13/2001 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் வெற்றிடமான பதவிகளுக்காக தேவையான தகைமைகளை பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு உள்ள இயலுமை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அந்த |

| | | |
|---|---|---|
| | | பதவியின் கடமைகள் அல்லது அவற்றுள் ஒரு பகுதியை நிறைவேற்றும் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்கக்கூடாது என்பதும், ஏதேனுமொரு உத்தியோகத்தர் ஓய்வு பெற்று செல்வதால் வெற்றிடமாகும் பதவிக்கு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை முன்கூட்டியே பயிற்றுவிப்பதற்காக நிரந்தரமான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல் அமைச்சின் செயலாளர்களின் பொறுப்பான போதிலும், அந்த கடமையினை புறக்கணித்து பயிற்சி பெற்ற உத்தியோகத்தர் ஒருவரை கண்டுபிடித்தல் கடினமானதென குறிப்பிட்டு தொடர்ச்சியாக ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் பதவிகளுக்கு நியமிக்க கோரிக்கை விடுக்க கூடாதென குறிப்பிட்டிருந்த போதிலும், அதிகாரசபையினால் மதியுரையாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், பிரத்தியேக செயலாளர், பிரதி பணிப்பாயர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், தொழில்கள் பணிப்பாளர் பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் இணைப்பு செய்யப்பட்டிருந்தனர். |
| (ஒ) | 2017 சனவரி 11 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | அதிகாரசபையினால் 2017 ஆம் ஆண்டிற்கான பதவியணி மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய SP/RD/02/10 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கை | |
| | 3.4 ஆம் பந்தி | அரச காணிகளை அப்புறப்படுத்தும் போது அந்தந்த நிறுவனங்களுக்குரிய அதிகாரச்சட்டங்களில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய காணிகளின் சட்டரீதியான உரித்து கிடைக்காமையால் அந்த ஆதனங்களை மூன்றாம் தரப்பினருக்க ஒப்படைக்க முடியாதெனவும், அவ்வாறே சுவீகரிக்கப்பட்ட அரச காணிகளை அவ்வாறு சுவீரிக்கப்பட்ட பணிகளுக்காக மாத்திரம் ஈடுபடுத்தப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள போது நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நகர அபிவிருத்திக்காக வழங்கப்பட்டுள்ள |

பெரும்பாலான காணிகள் சுவீகரிக்கப்பட்ட பணியில் ஈடுபடுத்தப்படாது தனியார் நிறுவனங்களுக்காக நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் கைமாற்றப்பட்டிருந்ததுடன், மேலும் சில பெறுமதியான காணிகள் சொகுசு மாடி வீடுகளை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தொகுதியில் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 837 மில்லியன் மற்றும் அதிகாரசபையின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 227 மில்லியன் ஆக இருந்தன. முன்னைய ஆண்டில் தொகுதியினதும் அதிகாரசபையினதும் வரிக்கு முன்னரான இலாபம் முறையே ரூபா 825 மில்லியன் மற்றும் ரூபா 133 மில்லியன் ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தொகுதியினதும், அதிகாரசபையினதும் நிதி விளைவுகள் முறையே ரூபா 12 மில்லியன் மற்றும் ரூபா 94 மில்லியன் தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. தொகுதியின் ஏனைய வருமானம் ரூபா 864 மில்லியனால் மற்றும் அதிகாரசபையின் மற்றும் தொகுதியின் வருமானம் ரூபா 559 மில்லியனால் அதிகரித்திருந்தமை மற்றும் தொகுதியின் நிதி செலவினங்கள் ரூபா 583 மில்லியனால் மற்றும் அதிகாரசபையின் அந்த செலவினங்கள் ரூபா 615 மில்லியனால் குறைவடைந்திருந்தமை மேற்கூறப்பட்ட நிதிவிளைவுகளின் அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டைத் தவிர ஏனைய ஆண்டுகளின் போது இலாபம் பெறப்பட்டிருந்தது. எனினும் நிதி விளைவுகளில் ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் வருமான வரி என்பவற்றை மீளச் சீராக்கும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 2,185 மில்லியன் தொகையான அதிகாரசபையின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 2,069 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

நகர அபிவிருத்திக்குரிய ஒன்றிணைந்த திட்டத்தைத் தயாரித்து அமுல்படுத்துதல், நகர அபிவிருத்திக்குரிய செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு கையேற்றல் மற்றும் நகர காணிகளை பயன்படுத்துதல் தொடர்பான கொள்கைகளைத் தயாரித்தல் என்பன அதிகாரசபையின் பிரதான பணிகளாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது நகர அபிவிருத்திக்குரிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் ஆண்டில் செயற்திட்ட முன்னேற்ற அறிக்கையின் படி அதிகாரசபையினால் 2017 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 396 மில்லியன் தொகையான 14 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் வேலைபூர்த்தி செய்யப்பட வேண்டிய ரூபா 1,506 மில்லியன் கிரயமான 34 செயற்திட்டங்களில் பௌதீக செயலாற்றல் 50 சதவீதத்திற்கு

குறைவாக இருந்தது. அத்துடன், செயலாற்றல் 25 சதவீதத்தினை விட குறைவான 10 பணிகளின் கிரயமானது ரூபா 240 மில்லியன் ஆகும்.

(இ) 1978 இல் 41 ஆம் இலக்க நகர சபை அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் 243 நகர அபிவிருத்தி வலயங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அதில் 42 வலயங்களுக்கு மாத்திரமே அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது நீண்ட கால குத்தகை முறையின் கீழ் அபிவிருத்திக்காக இரண்டு தனியார் நிறுவனங்களுக்கும் மருதானை மற்றும் ராஜகிரிய இல் அமைந்துள்ள 03 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பளவினை உடைய 02 காணிக்கூறுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் இந்த அறிக்கை விநியோகிக்கப்பட்ட திகதி வரையிலும் அந்தக் காணிக் கூறுகளால் இரண்டிற்காகவும் மேலும் கிடைக்க வேண்டிய ரூபா 1,998.7 மில்லியன் எஞ்சிய நீண்ட காலக் குத்தகைப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படுகின்ற வாடகை மற்றும் குத்தகை அடிப்படையில் வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கொழும்பு மத்திய உயர் சந்தைத் தொகுதி, கழம்பு கோல்ட் சென்டர், நடைபாதை சந்தைத் தொகுதி மற்றும் பொரளை பேமன் பார்க் சந்தைத்தொகுதி போன்ற செயற்திட்டங்கள், திட்டமிடல் நலிவுகள் மற்றும் அந்த சந்தைத் தொகுதிக்காக போதியளவான நுகர்வோர்கள் வருகை தராமை போன்ற காரணங்களினால் தோல்வியடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி அளவில் பெரும்பாலான கடைகள் மூடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டங்களை மீள செயற்படுத்துவதற்கும் மற்றும் அந்தச் தொகுதிகள் தொடர்பாக விரிவான விளம்பரம் ஒன்றை வழங்குவதற்கான போதியளவான நடவடிக்கைகள் அதிகாரசபையினால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நாவின்னப் பிரதேசத்தில் விளையாட்டுத் தொகுதி ஒன்றை நிர்தாணிப்பதற்காக 2009 ஆம் ஆண்டின் போது கைப்பற்றப்பட்ட 158 பேர்ச் காணிக்கு ஈடாகும் வகையில் அதிகாரசபையினால் கையேற்கப்பட்டிருந்த மாலபேயில் அமைந்துள்ள 296 பேர்ச் காணி நாவின்னவில் அமைந்துள்ள காணி உரித்துக் கம்பனிக்கு வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்தது. எனினும் கையேற்கப்பட்ட காணிக்காக பிரதான மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டு அறிக்கை பெறப்படாமல் ஈடுசெய்யப்பட்ட நாவின்னயில் அமைந்துள்ள காணியின் உரிமையாளருக்கு ரூபா 55 மில்லியன் தொகை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் செலுத்தப்பட்டிருந்தமை முன்னைய ஆண்டுகளில் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு தொகையும் உரிமையாளருக்கு செலுத்தப்படவில்லை என மீளாய்வாண்டின் போது கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்ததமை கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(ஈ) நகர புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் அதிகாரசபையினால் வீட்டு நலனாளிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ள 16 வீடுகளில் ஒரு வீடமைப்பு திட்டத்திலிருந்து மாத்திரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதிக்குரிய கட்டணங்கள் அறவிடப்படாமையின் அடிப்படையில் அறவிடப்படாது காணப்படும் நிலுவைத் தொகையானது ரூபா 166,839,918 ஆக இருந்ததுடன், ஏனைய வீடமைப்பு திட்டங்களிலிருந்து பெற வேண்டிய மீதிகள் தொடர்பில் விபரங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிக்கவில்லை.

(உ) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் துணைக் கம்பனியாக 2014 நவம்பர் 21 ஆந் திகதி உருவாக்கப்பட்ட Urban Investment & Real Estate தனியார் கம்பனி, Urban Investment & Hotel Development கம்பனி, Orchard Urban Housing Development கம்பனி மற்றும் Waters Edge Hotel Development கம்பனி தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையில் மேற்கூறப்பட்ட கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 270(ஆ) பிரிவின் பிரகாரம் வருடமொன்று கடந்தவுடன் கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாத சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தின் மூலம் மூடிவிடும் நிலைமையின் கீழ் காணப்பட்ட போதும் அது தொடர்பாக பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்திருக்கவில்லை.

(ஊ) அதிகார சபையினால் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட வியாபார வளங்கள் முகாமைத்துவ கட்டமைப்பின் (Enterprise Resource Planning) செயற்பாடுகளை முன்கொண்டு வராமல் கணக்கீட்டு கணனி மென் பொருளொன்றை ஸ்தாபிப்பதற்கும், பராமரிப்பதற்குமாக தனியார் நிறுவனமொன்றுடன் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 8.3 மில்லியன் தொகைக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும் உடன்படிக்கை செய்யப்பட்ட 120 நாள் ஒப்பந்தக் காலத்தில் கணக்கீட்டு கணனி மென் பொருள் (Customized Accounting Software Package) ஸ்தாபிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு இது வரையில் 2½ வருடங்களுக்கு அண்மித்த காலமொன்று கடந்திருந்த போதிலும் அந்த மென்பொருளின் மூலம் அதிகாரசபை எதிர்பார்த்த கணக்கீட்டு முறைமையை முறைமைப்படுத்தும் நடைமுறை மற்றும் கணக்கீட்டு தகவல்களை பெற்றுக்கொள்ளும் நடைமுறை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(எ) நகர புனர்வாழ்வு செயற்திட்டத்திற்கான நிதி மதிப்பீடு மற்றும் அமைச்சரவை வழங்கிய ஆலோசனைகள் மற்றும் முன்மொழிவுகளின் பிரகாரம் விடுவிக்கப்பட்ட காணிகள் முதலீட்டு செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தி நிதியம் கண்டறிய வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் விடுவிக்கப்பட்ட எந்த ஒரு காணியும் அவ்வாறான வருமானம் உழைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன் வியாபார திட்டங்கள் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்ள வேண்டிய மாதாந்த வாடகை வருமானம் அல்லது நிலுவைத் தவணைப் பணம் ஆகியவற்றை தொடர்ச்சியாக செலுத்தாத கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோரின் சதவீதம் 67 சதவீதம் எனும் உயர்வான பெறுமானத்தினை கொண்டிருந்தது. இதன் பிரகாரம் வாடகை வருமானத்தினை அறவீடு செய்யும் நடைமுறை மிகவும் நலிவான மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, அதிகாரசபையினால் முறையான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறையொன்று இது தொடர்பில் அறிமுகப்படுத்தப்பட்டிராததுடன், வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படாத வாடகையாளர்களின் வாடகை உடன்படிக்கைகளை இரத்துச்செய்ய அல்லது ஆதனங்களை ஏனைய முதலீட்டு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தவும் தவறியிருந்தது.

(ஏ) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான வருமான மூலமான வாடகை வருமானம், பாவனைக் கட்டணம், மிகை அறவீடு மற்றும் குத்தகை வருமானம் ஆகியவற்றில் வருமானம் தொடர்ச்சியாக சேகரிக்கப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்ட போதிலும், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக உரிய ஆவணங்கள் கோரப்பட்ட போதிலும், கணக்காய்விற்கு அந்த தகவல்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபைக்குச் சொந்தமான கோட்டை டீ.ஆர்.விஜயவர்தன மாவத்தை எல்லையில் அமைந்துள்ள 2 ஏக்கர் 2 ரூட் 21.4 பேர்ச் அளவான காணி ஒன்றை அபிவிருத்தி செய்வதற்காக தனியார் கம்பனி ஒன்றுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் கீழ் 99 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கும் போது அரசாங்க மதிப்பீட்டாளரின் பெறுமதியை விட ரூபா 330 மில்லியன் குறைவாக இந்தக் காணியை குத்தகைக்கு வழங்குவதற்காக இணக்கப்பாடு தெரிவித்தமையின் காரணமாக இந்தக் காணியை அகற்றும் போது ரூபா 330 மில்லியன் நட்டமொன்றை அதிகாரசபைக்கு ஏற்க வேண்டி ஏற்பட்டிருந்தது. எனினும், இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகங்களில் சகல உத்தியோகத்தர்களையும் மற்றும் ஏனைய பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய 108 உத்தியோகத்தர்களுக்கு அந்த உத்தியோகத்தாவர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 1/3 ஆன பிரகாரம் விஷேட படி ஒன்று திறைசேரி அங்கீகாரமின்றி முன்னைய சில வருடங்களில் தொடர்ச்சியாக செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா 12,415,408 ஆகும். அவ்வாறு விஷேட படி செலுத்துவதற்காக உத்தியோகத்தர்களை தெரிவு செய்த அடிப்படை கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையின் துணைக்கம்பனியான நகர அபிவிருத்தி மற்றும் முதலீட்டுக் கம்பனியினால் ரூபா 17,500,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட டொயோட்டா லேன்ட்குரூசர் வகையின் ஜீப் வண்டி கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் அதிகாரசபையின் தலைவரினால் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்த வாகனத்தின் பராமரிப்புச் செலவினங்கள் யாவும் மீளாய்வாண்டின் போதும் துணைக்கம்பனியினால் செலவிடப்பட்டு பின்னர் அதிகாரசபையினால் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபைக்குச் சொந்தமான பம்பலப்பிட்டிய புகையிரத நிலைய வீதியில் ஒரு ஏக்கரும் 23.1 பேர்ச் பரப்பளவுடைய காணியில் 40 மாடிகளையுடைய டவர் கட்டிடம் (போடியம்) நிர்மாணிப்பதற்காக 1993 ஆம் ஆண்டின் இறுதியில் அதிகாரசபை ரூபா 92 மில்லியனையும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ரூபா 120 மில்லியனையும் செலவிட்டிருந்தன. 1993 ஆம் ஆண்டின் இறுதியில் கட்டிடத்தின் 3 மாடிகளில் (43,000 சதுர அடியைக் கொண்ட) கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கட்டிடத்தின் குறைபாடுகளான அபிவிருத்தி செய்தல், பராமரித்தல் மற்றும் வெளிக் காணிகளைக் கைப்பற்றி அபிவிருத்தி செய்தல் போன்றவைகளுக்கு வ/ப ஒஷன் விச் டிவலப்மன்ட் தனியார் கம்பனி என்ற பெயரில் நகர அபிவிருத்தி அதிகாரசபையும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையும் கூட்டுமுயற்சி வியாபாரமொன்றை ஆரம்பித்திருந்தது. அந்தக் தனியார் கம்பனியினால் கட்டிடத்தின் கடைகளை வாடகைக்கு வழங்கி வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் 1993 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையும் அதிகாரசபைக்கு எந்த ஒரு இலாபமும் கிடைத்திருக்கவில்லை. நீண்டகாலமாக குத்தகை அறவிடப்பட்டது வருடமொன்றிற்கு ரூபா 100 என்ற பெயரளவிலான வாடகையின் கீழ் 99 வருடங்களுக்கு குத்தகை அந்த ஆதனம் அத்தனியார் கம்பனிக்கு கையளிக்கப்பட்டமையினால் அதிகாரசபை இட்ட முதலீட்டிற்கு எந்தவொரு பிரதி பலனும் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 500,000 தொகை மற்றும் கொழும்பு காணி மற்றும் அபிவிருத்திக் கம்பனியில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 36,309,841 தொகை என்பவற்றுக்காக மீளாய்வாண்டில் எவ்வித இலாபபங்கும் கிடைத்திருக்கவில்லை.

(இ) கொம்பனித்தெரு மீள் அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய காணியில் குடியிருந்து வரும் குடும்பங்களுக்காக மாடி வீட்டு அலகுகளை நிர்மாணிக்கும் பணிகள் 2015 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட இருந்த போதிலும் காணி அபிவிருத்தியாளரினால் நிர்மாண நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டிருந்த ஒப்பந்தக்காரரின் தாமதத்தின் அடிப்படையில் உரிய செயற்திட்டம் தாமதம் அடைந்திருந்தது. அதன் காரணமாக 2017 ஆம் ஆண்டில் உரிய நிர்மாணப் பணிகளின் மதியுரை நிறுவனத்திற்கு ரூபா 5,496,000 தொகையான மேலதிக மதியுரைக் கட்டணமும் காணியில் குடியிருந்தவர்களுக்கான மாடி வீட்டு அலகுகளை வழங்கும் வரை மாதாந்த வாடகை ரூபா 61,198,000 ஆக கூட்டு மொத்தமாக ரூபா 66,694,000 தொகை அதிகாரசபையில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் காணி அபிவிருத்திக் கம்பனியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அத் தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியத்தில் ரூபா 3,861,828 ஆன தொகை செலவிடப்பட்டு ஊடக நிறுவனத்தின் தலைவர்கள், ஊடக நிறுவனங்களிள் கதாசிரியர்கள், புகைப்படக் கலைஞர்கள் ஆகியோருக்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் எதிர்வரும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மற்றும் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பிலான புரிந்துணர்வை பெற்றுக்கொள்வதற்காக செயலமர்வொன்று நடாத்தப்பட்டிருந்தது. எனினும், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மற்றும் மேலட மாகாண அபிவிருத்தி அமைச்சின் மேலதிக அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பில் பத்திரிக்கை போன்ற அச்சு ஊடககங்களிலிருந்து மற்றும் வானலை ஊடகங்களிலிருந்து 2017 ஏப்ரல் மாதத்தினுள் மற்றும் அதன் பின்னர் மக்களுக்கான அறிவிப்புகள் எவையும் வெளியிடப்பட்டிருக்கவில்லை. ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய 700 உத்தியோகத்தர்களுக்காக உணவு, நினைவுச் சின்னம், அழைப்பிதழ், ஒலிபெருக்கி உபகரணங்கள் ஆகியவற்றுக்கான செலவினம் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான டெவல் கஜூ கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,861,828 தொகையான அசாதாரணமான செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டம்

அதிகாரசபையின் வருமானம் சேகரிக்கப்படும் இடங்களின் பணிகள் நாளாந்தம் அதி கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், பெத்தகான ஈரலிப்பு பூங்காவில் நுழைவுச்சீட்டுக்களின் விற்பனை வருமானத்தினை பரிசோதித்து, அந்த வருமானத்தினை சரியாக வங்கியிலிடப்பட்டதா என்பது தொடர்பான பரிசோதனையொன்று ஆகக்குறைந்தது ஒரு மாதத்திற்கு ஒரு தடவையேனும் இடம்பெறாமையின் அடிப்படையில் கடந்த 2016 ஆம் ஆண்டின் யூன் மாதம் முதல் இந்த கணக்காய்வு அறிக்கை வெளியிடப்படும் திகதி வரையிலுமான காலப்பகுதியினுள் பூங்காவின் நுழைவுச்சீட்டு வருமானத்தில் ரூபா 3,583,485 இற்கு மேற்பட்ட தொகை அந்த உத்தியோகத்தர்கள் இது வரையிலும் வங்கியில் வைப்புச் செய்யாது மோசடி செய்தமை உறுதி செய்யப்பட்டது.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பதவியணியை அங்கீகரிக்கும் மற்றும் ஆட்சேர்க்கும் நடைமுறையொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பணிப்பாளர் (ITS) பதவிக்காக விண்ணப்பதாரியொருவரை தெரிவு செய்யும் போது நேர்முகப்பரீட்சையில் அதிக புள்ளிகளை பெற்ற உத்தியோகத்தர் தெரிவு

செய்யப்படாது 3 ஆம் இடத்தினை பெற்ற விண்ணப்பதாரிக்கு பதவி வழங்கப்பட்டிருந்ததுடன், இந்த உத்தியோகத்தர் நகர அபிவிருத்தி மற்றும் முதலீட்டு கம்பனிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டு பின்னர் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு முழுமையாக இணைப்பு செய்யப்பட்டிருந்தார். இந்த நிலமை இவ்வாறு உள்ள போது உத்தியோகத்தரால் ஒவ்வொரு நாளும் விரலடையள இயந்திரத்தில் பதிவு செய்து மற்றுமொரு அரச நிறுவனத்தில் சேவையாற்றியிருந்தமை தொடர்பில் அவர் அதிகாரசபையில் பகுதியளவில் சேவையாற்றிய போதிலும், முழுச் சம்பளம் மற்றும் வருகைப் படி மற்றும் எரிபொருள் மற்றும் போக்குவரத்து படி ஆகியன செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையினால் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதவியணியினுள் உள்ளடக்கப்படாத 06 பதவிகளுக்காக 06 உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(ஈ) நகர புனர்வாழ்வு செயற்திட்டத்திற்காக ஊழியர்களை ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்த்துதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நகர புனர்வாழ்வு செயற்திட்டத்தின் நடவடிக்கைகளைச் செய்வதற்கு தேவையான ஊழியர் எண்ணிக்கைக்காக மேலதிக ஊழியர் எண்ணிக்கை தேவையானது எனக் காண்பித்து 217 உத்தியோகத்தர்களையுடைய பதவியணி ஒன்றுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதும் ஒப்பந்த அடிப்படையில் 60 உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ii) செயற்திட்டத்தின் நடவடிக்கைக்காக அதிகாரசபையில் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 19 உத்தியோகத்தவஷர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு நியமிக்கும் போது மேலதிக செயற்திட்ட பணிப்பாளர் பதவி, 08 பிரதி செயற்திட்ட பணிப்பாளர் பதவி, 06 உதவி செயற்திட்ட பணிப்பாளர் பதவி மற்றும் 04 செயற்திட்ட முகாமையாளர் பதவி என செயற்திட்டத்திற்காக அசாதாரணமான உயர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டதன் காரணமாக செயற்திட்டத்தின் பதவியணியினரின் கிரயம் அதிகரித்திருந்தது.

(உ) அதிகாரசபையினால் முறையான நடைமுறையொன்று பின்பற்றப்படாது மதியுரையாளர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன், இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த மதியுரையாளர்கள் மதியுரை சேவைகளை வழங்குவதற்கு தேவையான கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை பெற்றிருக்கவில்லை.

(ஊ) நிறுவனத்தின் பணிப்பொறுப்புகளை இனங்கண்டு அதற்கு தேவையான ஆகக் குறைந்த பதவியணியை மதிப்பீடு செய்து பதவிநிலை அட்டவணையை தயாரித்து அதனை அங்கீகரித்துக்கொள்ள பல வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிறுவனத்தில் காணப்படும் ஒவ்வொரு பதவிகளின் நியமனங்கள் மற்றும் பதவியுயர்வு ஆகியவற்றுக்காக ஆகக்குறைந்த தகுதிகள் மற்றும் அனுபவத்தினை நிர்ணயித்து ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நிறுவனத்தில் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிராமையால் முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் மிகவும் முறையற்ற விதத்தில் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளை மாற்றியமைத்து உத்தியோகத்தர்கள் பதவிகளில் நியமிக்கப்பட்டு பதவியுயர்த்தப்பட்டிருந்தனர்.

(ஏ) உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்கும் போது அதற்கு அண்மிய பதவியில் சேவையாற்ற வேண்டிய ஆகக் குறைந்த காலம் முறையான மதிப்பீடின்றி பணிப்பாளர் பதவியொன்றிற்கெனின் பிரதி பணிப்பாளர் பதவியில் 05 இலிருந்து 03 வருட காலம் வரையிலும், அவ்வாறே பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு

பதவியுயர்த்தும் போது பணிப்பாளர் பதவியில் கடமையாற்ற வேண்டிய காலப்பகுதி 07 இலிருந்து 05 வருடம் வரையிலும் குறைக்கப்பட்டிருந்தது.

(ஐ) தற்போது அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டுள்ள அதிகாரசபையின ஊழியர்களை பதவியுயர்த்தும் நடைமுறையில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு பதவியுயர்த்துவதற்காக ஆகக் குறைந்தது பணிப்பாளர் நாயகம் பதவியில் 05 வருட சேவைக் காலத்தினை கொண்டிருக்க வேண்டிய போதிலும், ஒரு பிரதி பணிப்பாளர் பதவிக்காக 03 வருட சேவைக் காலத்தினை பூர்த்தி செய்ய உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஒ) சேவையிலிருந்து விருப்பின் அடிப்படையில் ஓய்வு பெற்றுச் சென்ற பணிக்கொடை கொடுப்பனவுகளையும் செலுத்திய உத்தியோகத்தர் ஒருவர் முறையற்ற விதத்தில் மீள சேவையில் ஈடுபடுத்தி மிகவும் குறைந்த காலப்பகுதியினுள் பதவியுயர்வு நடைமுறையிலிருந்து விலகி பிரதி பணிப்பாளர் பதவிக்கு பதவியுயர்த்தப்பட்டிருந்தார். எவ்வாறெனினும், இது தொடர்பில் சுட்டிக்காண்பித்த பின்னர் அதிகாரசபையின் பதவியணி அட்டவணையில் நிரந்தர பதவியொன்றில் ஒப்பந்த அடிப்படையில நியமிக்கப்பட்டிருந்தார்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் மீளாய்வாண்டின் போதும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான கூட்டிணைந்த திட்டத்தில் அடங்கியுள்ள மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட வேண்டிய உபாய வழிகள், மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் செயல்நடவடிக்கைத் திட்டம் காலரீதியில் மீளாய்வு செய்யப்பட்டு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் ஒவ்வொரு பிரிவினதும் இலக்கிடப்பட்ட பணிகளுக்குரிய உள்ளபடியான தரவுகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அந்தப் பிரிவுகளின் செயலாற்றலை மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வு அதிகாரசபையின் உயர் உத்தியோகத்தருக்கு பொறுப்பு கூற வேண்டியதுடன், நிதி அதிகாரச்சட்டத்தின் 13(5) இன் பிரகாரம் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்திற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. காணப்படுகின்ற சில உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளும் நலிவான நிலையில் காணப்படுவதாக அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை அமுல்படுத்துவதற்கான வழிகள் நிறுவனத்தில் காணப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் அதிகாரசபையின் பணிப்பொறுப்புக்களை விரிவுபடுத்தும் நோக்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பதவியணியை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிப்பொறுப்புக்களில் அதிகாரசபையின் செயலாற்றல் கணக்காய்விற்கு போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.4 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பொருட்கள் மற்றும் சேவைகள், மதியுரை சேவைகள் மற்றும் தகவல் கட்டமைப்பினை வழங்குவதற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், வேலைகளுக்கு மாத்திரமான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் கிரயம் விளைவுள்ள விதத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுகைகள் பணிகளை மேற்கொள்ள தவறியமையால் அதிகாரசபையின் நோக்கங்கள் மற்றும் சேவைகளை அடைந்து கொள்வதற்காக அச்சுறுத்தலாக அமையும் என அவதானிக்கப்பட்டிருந்தது. அதற்காக பணிகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்டம் வரிசை அமைச்சின் செயலாயரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) புஸ்ஸல்லாவ பேரூந்து தரிப்பிடத்தினை தயாரிப்பதற்கும் பக்கச்சுவரை நிர்மாணிப்பதற்கும் முறையே ரூபா 12,417,109 ஆன மற்றும் ரூபா 6,632,000 இன் ரூபா 19,049,109 கூட்டுப்பெறுமதியுடைய இரண்டு செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், நிர்மாண பணிகள் இலங்கை இராணுவத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கருங்கற்களில் நிர்மாணிக்கப்பட வேண்டிய பக்கச்சுவரின் ஒரு பகுதி சீமெந்துக் கற்களை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டிருந்தமையின் அடிப்படையில் பக்கச்சுவரின் பலமான தன்மையொன்று இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேற்படி முதலாவது மதிப்பீட்டில் விடயங்கள் மற்றும் இரண்டாம் மதிப்பீட்டின் 13 விடயங்களுக்காக ரூபா 6,914,000 கூட்டுப் பெறுமதியான போதிலும், அந்த தொகையை விஞ்சி ரூபா 2,749,742 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) புஸ்ஸல்லாவ பேரூந்து தரிப்பிடம் மற்றும் பயணிகள் காப்பினை நிர்மாணிப்பதற்காக ரூபா 16,916,094 பெறுமதியுடைய உடன்படிக்கைக்கு ஒப்பந்தக் கம்பனியுடன் கைச்சாத்திட்ட 2017 மார்ச் 14 ஆந் திகதி வரையிலும் ரூபா 5,074,543 தொகை அந்த கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. தொழிற்சாலை 2016 திசெம்பர் 11 ஆந் திகதி பூர்த்தி செய்ய வேண்டிய போதிலும், 2017 யூன் 06 ஆந் திகதி வரையிலும் ரூபா 7,077,745 தொகையான வேலை விடயங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் நிலவின. இதற்காக 2016 திசெம்பர் 28 ஆந் திகதி தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்திடமிருந்து ரூபா 15,000,000 தொகை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2017 மார்ச் 14 ஆந் திகதியில் உள்ளபடியாக அவற்றுள் ரூபா 5,074,543 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த நிர்மாணத்திற்காக தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் இணக்கப்பாடு மற்றும் பரிந்துரையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டினுள் பொறியியலாளர் மதிப்பீடுகளை தயாரிக்காது வடிவமைக்கப்பட்டு நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்படும் கிரயம் அதிகரித்தமையினை கருத்திற்கொள்ளாது ரூபா 108 மில்லியன் பெறுமதியான மற்றும் அதன் மேலான 10 சதவீத நிகழத்தக்க பொறுப்புக்களுடனான 05 ஒப்பந்தங்களுக்காக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அவ்வாறு ஒப்பந்ததாரரால் வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்படுவது முன் அனுபவம் இல்லாத மிகவும் விசேடமான நிர்மாணங்களான போதிலும், அவ்வாறல்லாத நிர்மாணப் பணிகளுக்காகவும் வடிவமைக்கப்பட்டு நிர்மாண ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தது.

(உ) கடுகன்னாவ சுரங்க வழியினை அபிவிருத்தி செய்யும் உடன்படிக்கையை கையளிக்கும் போது போட்டி அடிப்படையிலான கூறுவிலைகளை பெற்றுக்கொள்ள தவறியிருந்ததுடன், அதற்காக முன்வந்திருந்த ஒரே நிறுவனத்திற்கு அதன் அபிவிருத்தி பணிகளுக்காக செலவிடப்பட்டதாக கணிப்பிடப்பட்ட பொறியியல் மதிப்பீட்டின் 42.5 சதவீதத்திற்கு மேற்பட்ட பெறுமதியுடனான ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(ஊ) அநுராதபுரம் கூம்பிச்சன் குளத்தினை புனரமைக்கும் செயற்திட்டத்திற்காக கூறுவிலைகளை கோரும் போது அரச துறையின் ஒப்பந்ததாரர்களின மட்டுப்படுத்தப்பட்ட விலைக்கேள்வி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அதற்கமைய விலைக்கேள்வியாளர்களுக்கு மிகவும் குறுகிய காலத்தினை வழங்கி கேள்வி திறக்கப்பட்டமையால் ஒரு நிறுவனத்திலிருந்து மாத்திரம் விலைக்கேள்வி கிடைத்திருந்ததுடன், அதற்கு பொறியியலாளர் மதிப்பீட்டினை விஞ்சி 61.8 சதவீதத்திற்கு அதிகமான விலைக்கேள்வி ஆனமையால் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் பொறியியல் மதிப்பீடு மீண்டும் கேள்வி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், முதலாவது தடவையாக விலைக்கேள்வி கோரப்பட்ட தகவல்கள் கணக்காய்விற்கு வழங்கப்படாததுடன் ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்யும் அடிப்படை பிரச்சினைக்குரியதென அவதானிக்கப்பட்டது.

## 5.5 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்களை தீர்த்து வைப்பதற்கு அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் போதியளவான கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் சில அவதானிப்புகள் தொடர்பில் பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(அ) வோட்டர்ஸ் ஏஜ் கம்பனி அமைந்துள்ள காணியில் 7.35 ஏக்கர் அளவு 128 அனுமதியற்ற கைப்பற்றல் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த அனுமதியற்ற நபர்களை அகற்றுவதற்காக முறையான நடவடிக்கைகளை அதிகாரசபை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கண்டி மாநகரசபை அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி வலய திட்டமிடலின் இயற்கையான பாதுகாப்பு வலயத்தின் நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்த போதும் அதிகாரசபையால் கட்டிட நிர்மாணத்திற்காக ஆரம்ப விடுவிப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையினால் கொட்டுவே கொட, ராஜகிரிய, பெரேரா மாவத்தையில் ஆரம்ப வரைபட இல. கொ 6399 ஆம் இலக்க நிலவரைபடத்தில் 6,7 மற்றும் 8 ஆம் இலக்க காணிக் கூறுகள் முறையற்ற வகையில் நீண்ட காலரீதியில் குத்தகை அடிப்படையில் அபிவிருத்தி செய்வதற்காக தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காணிக் கையளிப்பின் போது முன்னாள் பணிப்பாளர் (காணி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்) இனால் சாதாரண நடைமுறைகளுக்குப் புறம்பாக முறையற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) கண்டி மாநகர அதிகார பிரதேசத்திற்குரிய வெளியிடப்பட்ட அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் இடமளிக்கக்கூடிய கட்டின் விகிதம் 2.5 ஆக இருக்க வேண்டிய போதிலும் அதிகாரசபையின் மத்திய மாகாண கிளை மேற்கூறப்பட்ட கட்டின் விகிதத்தை விஞ்சி இருந்த கட்டிடங்களுக்காகவும் விடுவிப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

(உ) அதிகாரசபையின் மத்திய மாகாண கிளையினால் நிராகரிக்கப்பட்ட கட்டிடங்களின் ஆரம்ப விடுவிப்பு விண்ணப்பங்களுக்காக ஆரம்ப திட்டமிடல் விடுவிப்பு சான்றிதழ் வழங்குவதற்கு மாகாண பணிப்பாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை.

(ஊ) அதிகார சபைக்குரிய நந்தாராம வீடமைப்பு தொகுதிக்கு அடுத்துள்ள இஹல சந்தையின் பெறுமதியுள்ள 5.32 பேர்ச் வெற்றிடக் காணி அனுமதியற்ற வகையில் வெளித்தரப்பினர் ஒருவர் கைப்பற்றி இருந்த போதிலும் அதனை விடுத்துக் கொள்வதற்கு அதிகாரசபை எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(எ) கொழும்பு மற்றும் பதுளை மாவட்டங்களுக்குரிய பிரதேச செயலாளர்களினால் அதிகாரசபையின் மேற்பார்வை கையேற்கப்பட்ட 11.44 ஏக்கர் காணியை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2002 ஆம் ஆண்டின் போது ரூபா 16 மில்லியன் செலவில் புறக்கோட்டை சோன்டர்ஸ் பிரதேசத்தில் நடைபாதை வியாபாரிகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட மாற்று விற்பனை நிலையம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) நீதிமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் 2008 ஆம் ஆண்டின் போது அதிகார சபைக்குக் கையளிக்கப்பட்ட வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலுக்கு செலுத்துவதற்கு கட்டளை இடப்பட்ட ரூபா 406,483,000 தொகையிலிருந்து மேலும் ரூபா 261,483,000 தொகையைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஒ) கொழும்பு துரங்க தரங்க மைதானத்தை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்காக ரூபா 05 மில்லியனை விஞ்சிய ரூபா 40.64 மில்லியன் கூட்டுப்பெறுமதியான மூலதனப் பொருட்கள் மற்றும் ரூபா 72.36 மில்லியன் கூட்டுத்தொகையான ஏனைய செயற்திட்டங்களின் மூலதனப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது விலை ஒப்பீட்டு முறைமை பின்பற்றப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) வெள்ளவத்தை மயூரா பிரதேச வீடமைப்பு தொகுதியின் பழைய கட்டிடத்தை உடைத்து அகற்றுதல் மற்றும் உடைத்த பாகங்களை விற்பனை செய்வதற்காக இரண்டு ஒப்பந்தகாரர்களினால் முறையே ரூபா 12,200,240 மற்றும் ரூபா 3,800,000 தொகைகளை நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு இரண்டு கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தகாரர்களுக்கு அந்தப் பணிகள் கையளிக்கப்படாது அதிகாரசபையின் பணத்தில் ரூபா 6,296,440 தொகை செலவிட்டு அக்கட்டிடம் உடைத்து அகற்றப்பட்டு உடைத்த துண்டுகள் ரூபா 750,000 இற்கு விற்கப்பட்டமையின் காரணமாக அதிகாரசபைக்கு ரூபா 17,746,680 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஔ) மாதிவல பிரதேசத்தில் அமைந்துள்ள ரூபா 85 மில்லியன் பெறுமதியான 103 பேர்ச் காணிக்காக உரிய பிரகாரம் எல்லை குறிப்பிட்டு பாதுகாப்பு வேலி அமைக்கப்படாமையின் காரணமாக வெளிநபர்களினால் காணியில் அனுமதியற்ற நிரந்தரக் கட்டிடங்களை நிர்மாணித்து நிரந்தர பயிர்களும் பயிரிட்டிருந்தனர்.

(க) 2014 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய 229/2014 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் பேலியகொட வெயா ஹவுஸ் துணைக்கம்பனியின் வாகனங்களில் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களில் இனங்காணாத செயற்திட்டமான கொழும்பு நகரத்தின் குடிசைகளில் குடியிருப்பவர்களுக்கு 68,000 நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் தேசிய வேலைத் திட்டத்திற்கு நிதியினை வழங்கும் நோக்கில் அதிகாரசபையினால் 2010 ஒக்டோபர் மாதத்தின் போது ரூபா 10 பில்லியன் பெறுமதியான 5 வருடங்களில் விடுவிக்கக் கூடிய தொகுதிக் கடன்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. எனினும் தொகுதிக்கடன் விநியோகிக்கப்பட்டு 5 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கமான கொழும்பு நகரத்திலுள்ள 142 ஏக்கர் காணியை அபிவிருத்தி செய்தல் மற்றும் வியாபாரத் திட்டங்களைத் (Business Plan) தயாரித்தல்

மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் உத்தேச வீட்டு அலகுகள் 68,000 இல் 5,203 வீடுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு மக்களுக்கு உரித்து கையளிக்கப்பட்டிருந்தது.

(கி) 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/09 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தக மானியின் ஏற்பாடுகளுக் முரணாக பொரலஸ்கமுவ அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பொருத்தமற்ற நிலக்கூறு ஒன்றில் கீழ் மாடி உள்ளடங்கலாக 05 மாடிகளையுடைய கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு அதிகாரசபை அனுமதி வழங்கியிருந்தது.

(கீ) மத்திய மாகாண வலயத்திற்குரிய 1126.12 சதுர மீற்றர் கட்டிடம் ஒன்றிற்காக ரூபா 6,081,048 சேவைக்கட்டணம் அறவிட வேண்டி இருந்த போதிலும் அவ்வாறு அறவிடப்படாமல் கட்டிடம் நிர்மாணிப்பதற்கான ஆரம்ப திட்டமிடல் விருவிப்புச் சான்றிதழ் அந்த மாகாணத்தின் அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது.

(கு) நகர புனர்வாழ்வு செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- 10 வீடமைப்புத் தொகுதிகளின் 24 ஏக்கர் அளவான காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமை.

- அரசாங்கப் பெறுகைகள் வழிகாட்டிகளுக்கு முரணான நிர்மாண ஒப்பந்தம் கையளித்தமை, ரூபா 20.8 பில்லியன் தொகையான நிர்மாண ஒப்பந்தம் கேள்வி கோரலின்றி (Unsolicited Proposal) கையளிக்கப்பட்டமை.

- நகர புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள் கைவிடப்பட்டமை.
- வங்கிப் பிணைகள், தரகு மற்றும் சட்ட சேவைக்காக ரூபா 222 மில்லியன் பயனற்றதாக செலவிடப்பட்டமை.

- 65 வீட்டு அலகுகளுக்காக ரூபா 2,098 மில்லியன் மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டமை, 13 ஒப்பந்த வேறுபாடுகளுக்காக ரூபா 1,066 மில்லியன் மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டமை, 39 வீட்டு அலகுகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தை விட ரூபா 143 மில்லியன் மேலதிகமாக செலவிடப்பட்டமை.

- வாடகை உடன்படிக்கை இல்லாமையினால் அதிகாரசபை அறவிடவேண்டிய வாடகைப் பணத்தை குறித்த பிரகாரம் அறவிடுவதற்கு முடியாதிருந்தமை.

- கையளிக்கப்பட்டுள்ள 5203 மாடி வீடுகளை பராமரிக்கும் நடவடிக்கைகளுக்காக வேலைத் திட்டமொன்று அமுல்படுத்தப்படாமை.

- கொழும்பு மாநகர சபைக்கு நிர்மாணக் கிரயத்தை விட குறைவாக 157 வீட்டு அலகுகள் கையளிக்கப்பட்டமையால் ரூபா 137 மில்லியன் நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தமை மற்றும் புகையிரத விடுதிகளில் குடியிருந்து வரும் புகையிரத ஊழியர்களுக்காக நிரந்தர அடிப்படையில் 205 வீடுகள் வழங்கப்பட்டமையினால் புதிய ஊழியர்களுக்கு வீடுகளை வழங்க முடியாதிருந்தமை.

## 5.6 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாளாந்தம் கொழும்பு நகரிற்கு மற்றும் நெருக்கடியான நகர்களில் பல்வேறு தேவைகளுக்காக வருகைதரும் ஆயிரக் கணக்கான பொதுமக்களின் சுகாதாரத் தேவைகளை ஒழுங்குபடுத்திக் கொடுத்தல் மற்றும் அந்த வசதிகளை தொடர்ந்தும் அதிகரிப்பதற்காகவும் தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தல் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்கையொன்றான போதிலும், பல வருடங்களாக அதிகாரசபை அவ்வாறான துறைகள் தொடர்பிவ் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) நகரத் திட்டத்தினை தயாரிக்கும் போது மிகவும் நெருக்கடியான கிரிபத்கொட, மஹரகம, கொட்டாவ, ஹோமாகம, வத்தளை போன்ற கொழும்பிற்கு அண்மிய நெருக்கடியான நகரங்களை தவிர்த்து தூர பயண வீதிகளை திட்டமிட்டு நகர போக்குவரத்தினை திட்டமிடல் தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) பல்வேறு தேவைகளுக்காக வாகனங்களில் வருகை தரும் மக்களின் வாகனங்களை நிறுத்தி வைக்கும் இடங்களை உருவாக்குதல் மற்றும் அவ்வப்போது அதன் வசதிகளை அதிகரிக்கும் தேவைப்பாட்டின் அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அது தொடர்பில் அதிகாரசபை போதியளவு கவனம் செலுத்தப்பட்டிராமையின் அடிப்படையில் கொழும்பு நகர் மற்றும் அதனை அண்மித்த நெருக்கடி மிகுந்த நகர்களின் வீதி நெருக்கடியை தொடர்ந்தும் அதிகரிப்பதற்கு அந்த விடயங்கள் காரணமாக அமைந்திருந்தது.

(ஈ) அனுமதியற்ற நிர்மாணங்களைப் பரீட்சித்துக் பார்ப்பதற்காக காணப்படுகின்ற அதிகாரசபையின் அமுலாக்கல் பிரிவினால் காலரீதியில் புலனாய்வை மேற்கொண்டு அனுமதியற்ற நிர்மாணங்களை இனங்கண்டு அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுப்பதற்கான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நகர புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் முன்னைய ஆண்டின் இறுதியில் நிர்மாணிக்கப்பட 12 மாடிவீட்டு செயற்திட்டங்களின் கீழ் 5,800 வீடுகள் வீட்டு நலனாளிகளுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வீடுகளின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வீட்டு நலனாளிகளை உள்ளடக்கிய முகாமைத்துவ கூட்டிணைவைத் தாபிப்பதற்கு கூட்டுஆதன முகாமைத்துவ அதிகாரசபைக்கு முறையான அதிகாரம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான காணிகள் நகர அபிவிருத்திக்கான பொதுப் பணிகளில் ஈடுபடுத்துவதற்குள்ள தேவை தொடர்பில் கவனம் செலுத்தாது வெளிவாரி தரப்பினருக்கு நீண்ட கால வாடகை அடிப்படையில் வருமானம் ஈட்டுவதற்கு வழங்குவதற்கு அதிகாரசபை முன்னுரிமை வழங்கியிருந்தது.

## 5.7 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக்கொள்ளல்

1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் 8 ஆம் பந்தியில் அதிகாரசபையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன், உறுதியான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், குறைநிரப்பு மற்றும் நிலைபேறான கைத்தொழிலை மேம்படுத்தி நவீனமயப்படுத்தலை ஊக்குவித்தல் மற்றும் நகர சபை மக்கள் குடியிருப்புகளின் முழுமையான பாதுகாப்பினை பலப்படுத்துதல் மற்றும் நிலைபேறான முறையில் தயாரித்தல் போன்ற நோக்கங்கள் அதிகாரசபையின் பணிகளுடன் நேரடியாக தொடர்படுகின்றது.

எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் போது அதிகாரசபைக்குரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டிராமையால் அந்த நோக்கங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2017 யூலை 31 ஆந் திகதிய பீடீ/சீடீபீ/4/1/2-2018 மற்றும் 2017 யூலை 25 ஆந் திகதிய 2/2017 ஆம் இலக்க தேசிய பாதீட்டு திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடுகளை தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் வேண்டப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | (i) | இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது ஏனைய உப பிரிவுகள் மற்றும் துணைக் கம்பனிகளின் கணக்குகளின் தகவல்கள் சரியாக ஒன்றிணைக்கப்படாமை மற்றும் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் சரியாக நாளது வரையாக்கப்படாமை. |
| | (ii) | கணக்குகளின் அசாதாணமான வரவு மற்றும் செலவு மீதிகள் ஒன்றுக்கொன்று ஈடு செய்யப்பட்டதன் பின்னர் அவற்றின் இறுதி மீதி கணக்குகளில் சீராக்கம் செய்யப்படல். |
| | (iii) | ஒரு கணக்கிற்கான வரவு மற்றும் செலவு மீதிகளை உள்ளடக்கிய கணக்குகளின் அனேகமானவைகள் பரீட்சை மீதியில் உள்ளடக்கியிருந்தமை மற்றும் முன்னைய ஆண்டின் சீராக்கங்களின் அனேகமானவை பின்னர் மேற்கொள்ளப்பட்டமை. |
| | (iv) | கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் குறைபாடுகளின் காரணமாக கணக்காய்வாளரின் விடயப்பரப்பு வரையறுக்கப்பட்டமை. |
| (ஆ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) | கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் கடன்பட்டோர் மீதிகளின் சரியான தன்மை தொடர்பாக பிரச்சினைகள் காணப்பட்டமை. |
| | (ii) | கடன்பட்டோர் கணக்குகளை நாளது வரையாக்குதல் தாமதமடைந்தமை மற்றும் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாமை. |
| | (iii) | கடன்பட்டோரிடமிருந்து கடனை அறவிடுவதற்கு முறையாக செயல்நடவடிக்கைகள் பின்பற்றப்படாமை. |

| | | |
|---|---|---|
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | சரியான மதிப்பீடு தயாரிக்கப்படாமை, செலவினங்களை செய்தல் பாதீட்டுக் கட்டுப்பாட்டின்றி மேற்கொள்ளப்பட்டமையால் போதியளவான முரண்கள் காணப்பட்டமை. |
| (ஈ) | வருமான முகாமைத்துவம் | வருமானத்தினை நாளாந்தம் சேகரித்தல் மற்றும் அதிகாரசபையின் நிதியங்களில் வைப்புச் செய்தல் உரிய முறையில் கண்காணிக்கப்படாமை மற்றும் அது தொடர்பில் மோசடிகள் இடம்பெற்றிருந்தமை |
| (உ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்பட்டமை, சொத்துக்கள் சரியாக பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை, மெய்மையாய்வு அறிக்கை முறையாக பேணிச் செல்லப்படாமை.<br>(ii) காணிகளின் பயன்பாடு நலிவடைதல், அதிகாரசபைக்கு காணிகள் சுவீகரிக்கப்பட்டமைக்கான நோக்கத்திற்கு புறம்பாக இரண்டாம் தரப்பினருக்கு நீண்ட கால அடிப்படையில் குத்தகை முறைமையின் கீழ் குத்தகைக்கு வழங்குதல், நகர அபிவிருத்தி பணிகளுக்காக காணிகளை பயன்படுத்தாமை. |
| (ஊ) | பெறுகை நடைமுறைகள் | போட்டியாளர் கேள்வி கோராது புறக்கணிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை. |
| (எ) | மனிதவள முகாமைத்துவம் | பதவியுயர்வு மற்றும் ஆட்சேர்த்தல்கள் உரிய நடைமுறைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படாமை மற்றும் வெற்றிடம் காணப்படுகின்ற பதவிகளுக்காக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காமை. |